சுருக்கம்

நினைவகம்–சென்னையில் அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க பீடம் கட்ட–நிதி ஒப்பளிப்பு.ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>செய்தி மற்றும் சுற்றுலா (நினைவகம்)த் துறை</u>

அரசாணை (நிலை) எண். 96 நாள்: 26.05.2006

படிக்கப்பட்டது:

1) தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) ,சென்னை கடித எண்.உ.செ.பொ.18/52965/ 2002 நாள் 20.5.2006

2) அரசாணை (நிலை) எண். 95 செய்தி மற்றும் சுற்றுலா (நினைவகம்)த் துறை நாள் 26 .5.2006.

<u>ஆணை</u>:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 8 அடி உயரமுள்ள முழு உருவ வெண்கலச் சிலை, பாண்டிச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள, அவரது சிலையின் மாதிரி வடிவம் போன்று, சென்னையில், காமராசர் சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் மணிக்கூண்டிற்கு அருகில் அமைக்க அரசால் முடிவெடுக்கப்பட்டு, படிக்கப்பட்ட அரசாணை இரண்டின் மூலம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சிலையினை அமைக்க புதிய பீடம் கட்ட ரூ.4.00 இலட்சம் செலவாகும் என தலைமைப் பொறியாளர், (கட்டிடம்) பொதுப்பணித்துறை, சென்னை அவர்கள் படிக்கப்பட்ட கடிதம் ஒன்றில் மதிப்பீடு அனுப்பியுள்ளார்.

2) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களின் வேண்டுகோளை ஏற்று, சென்னையில், காமராசர் சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் மணிக்கூண்டிற்கு அருகில் சிலை நிறுவ ரூ.4.00 (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3) பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4220 செய்தி மற்றும் விளம்பரம் குறித்த மூலதன செலவு-60 ஏனையவை-101 கட்டிடங்கள்-I திட்டத்தில் சேராதது –AC கட்டிடங்கள்-16 பெரும்பணிகள்". (DPC 4220 60 101 AC 1603)

4) தேவையான நிதி, 2006-07 ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். 2006-07 ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதியொதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி, மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று தலைமைப் பொறியாளர் (கட்டடம்), மேற்படி பணியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

5) 2006-07 ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கான கருத்துருவில் ,இச்செலவினத்தையும் சேர்த்திடுமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை வெளியிடுவதற்கு, நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 104/JS(TK)/நிதி (செய்தி மற்றும் சுற்றுலா)/2006 நாள் 26.5.2006 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 114–ன் மூலம் இசைவளித்துள்ளது.

/ஆளுநரின் ஆணைப்படி/

வெ. இறையன்பு
அரசு செயலாள ர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை,
சென்னை 600 005.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
சம்பள கணக்கு அலுவலர், சென்னை 9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 18/35
கணக்கு அலுவலர், செய்தி மற்றும் சுற்றுலா (வ.செ.பிரிவு) சென்னை–9

நகல்:
நிதி(பிஜி.1)(வ.செ.பொ.II/செ(ம)சு)த்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்